சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.

அமர்வு வழக்கு எண். **16 / 2015** அ.சா. **5** பஞ்சவர்ணம்.

நாள் **- 24.11.2023.**

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

என் மகள் சம்பவம் நடந்த அன்றே மருத்துவமனைக்குச் சென்றார். நான் மருத்துவமனையில் உடனிருந்தேனா என்றால் உடனிருந்தேன். என் மகள் சம்பவம் நடந்த மறுநாள் புகார் கொடுத்தார். என் மகள் புகார் கொடுத்தபோது, அவர் மீது மண்ணெண்ணெய்தான் தவறி விழுந்ததாகத்ததான் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் மகள் மருத்துவமனையில்சிகிச்சைக்குச் சேரும்போது, புகார் கொடுத்தபோதும், என் மகள் மீது மண்ணெண்ணெய் பட்டுத்தான் தீ பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும், என் கணவரும் சம்பவம் கேள்விட்டுத்தான் மருத்துவமனைக்கு என் சொந்தஊர் கல்லுப்பட்டியிலிருந்துதான் வந்தோம் என்றால் சரிதான். நானும், கணவரும் வந்த பின்னர்தான் மாற்றி சொல்லச் சொன்னோம் என்றால் சரியல்ல. என் மகள்தான் சொல்லச் சொன்னதாக் சொன்னார். சம்பவத்திற்கு பின்னர் என் மகளுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னர் என் மகள் முறையாக விவாகரத்து பெறவில்லை என்றால் சரிதான். நானும் என் கணவரும் ஊரிலிருந்து வந்த பின்னர்தான் சம்பவம் நடந்தது தெரியும் என்றால் சரியல்ல. முன்பே பிரச்சனை இருந்தது. என் மகளுக்கு தீ பிடித்த சம்பவம் எனக்கும் என் கணவருக்கும் மருத்துவமனைக்கு வந்தபின்னர்தான் தெரியும் என்றால் சரிதான். என் மருமகன் என் மகள் மீது மண்ணெண்ணெயை ஊற்றவில்லை என்றால் சரியல்ல. என் மகள் தற்போது திருமணம் செய்த நபரை திருமணத்திற்கு முன்பே காதலித்தார் என்றால்

சரியல்ல. அவ்வாறு வற்புறுத்தி நாங்கள் திருமணம் செய்து வைத்தால்தான் என் மகளே தடுமாறி கீழே விழுந்ததை வைத்து பொய்யாக வழக்குப் போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் காயம்பட்டவர் என் மகள் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னையும், என் கணவரையும் போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் சொன்னதுபோல் சொன்ன மாதிரி சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம் / திரு. P.S. ரஸ்கின் ராஜ், 24.11.23.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.